# தந்தி

இல: 1077 | 1970 ஜூலை 9 வியாழக்கிழமை ★ | விலை சதம் 5


University of Jaffna Sri Lanka
RECEIVED
Periodicals Division
Library

## கொழும்புத் துறைமுகத்தில்

# வாகன குத்தகை முறை தேசியமயமாகும்!



பி. பி. ஜி. கலுகல்லே

**கொழும்பு துறைமுகத்தில் தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டிருக்கும் வாகன குத்தகை முறை ரத்துச் செய்யப்படும்.**

இதை அரசாங்கமே பொறுப்பேற்று நடத்துவது என கப்பல் போக்குவரத்து, உல்லாசப் பிரயாணத் துறை மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லே தீர்மானித்துள்ளார்.

துறைமுகத்தில் இறக்குமதியாகும் பொருட்களை இடத்துக்கிடம் கொண்டு செல்லும் வேலை குத்தகை முறையில் தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டு உள்ளது தெரிந்ததே.

இந்த குத்தகையில் பல மோசடிகள் நிகழுவதாக கிடைக்கப்பட்ட முறைப்பாடுகளை அடுத்தே மந்திரி திரு. கலுகல்லே இந்த நடவடிக்கையில் இறங்கி உள்ளார்.

உணவுத் திணைக்களத்துக்கே பெருந்தொகையான உணவுப் பொருட்கள் துறைமுகத்தில் இருந்து கொண்டு செல்லப்படுகின்றன. இதுபற்றி வர்த்தக மந்திரி திரு. ரி. பி. இலங்கரத்னவுடன் திரு. கலுகல்லே பேச்சுவார்த்தை நடத்தினர். உணவுப் பகுதிக்கு புதிதாக 500 லொறிகளை வாங்குவதற்கு வர்த்தக மந்திரி ஒத்துக்கொண்டுள்ளார் எனத் தெரிய வருகிறது.

வாகன குத்தகை முறை தேசியமயமாக்கப்பட்ட பின் இம்முறையின் கீழ் சேவை செய்த ஊழியர்கள்பற்றியும் தான் கவனிப்பதாக அமைச்சர் கூறியுள்ளார். (ல)

## இந்திய வொயில் சாரிகள் விற்பனைக்கு எப்படி வந்தன?

பெருந்தொகையான இந்திய வொயில் சாரிகள் திடீரென விற்பனைக்கு வந்துள்ளன. கொழும்பில் உள்ள பிரபல புடவைக் கடைகளில் இவைகளைக் குறைந்த விலைக்கு வாங்கக்கூடியதாக இருக்கிறது.

இந்திய சாரிகள் இவ்வளவு மலிவாக விற்பனைக்கு இருப்பது சலுசல அதிகாரிகளுக்குப் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது. கைத்தொழில் அதிபர் ஒருவர் இவற்றை இறக்குமதி செய்துள்ளதாகக் கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது.

அண்மையில் சலுசல புடவைகள் விற்கப்படும் பல கடைகளில் 5½ இந்தியயார் அளவுடைய இந்த சாரி ரூபா 19–25-க்கு விற்கப்பட்டன,

(4-ம் பக்கம் பார்க்க)



பார்ப்போர் மயங்கும் கட்டான உடம்பை வளைத்து கன்னி மேலே பார்க்கிறாள். இந்த உடல் காமிராவுக்குள் அகப்பட்டுக் கொண்டதை இவள் அறிவாளா?

0000000000000

## விவசாய படைக்கு கட்டாய லீவு

நாட்டின் நாலாபகுதிகளிலும் உள்ள சுமார் 4,000 விவசாயப் படை வீரர்கள் ஒரு மாத காலத்துக்கு கட்டாய லீவில் அனுப்பப் படுவர். (ல)

## சுனெத்ரா இலங்கை வருகிறார்

பிரதமரின் மூத்த மகளான செல்வி சுனெத்ரா பண்டாரநாயகா அதி விரைவில் இலங்கை வருகிறார்.

வெளிநாட்டுச் சேவையில் சேர்ந்து இடத்துக்கிடம் செல்ல செல்வி சுனெத்ரா விரும்பியிருந்தார். எனினும் இப்போது அவ்வெண்ணத்தைக் கைவிட்டு இலங்கைக்குத் திரும்ப அவர் விரும்புகிறார் எனக் கூறப்படுகிறது. (ல)

### தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டை

## தமிழக முதல் அமைச்சர் ஆரம்பித்து வைப்பார்

இம்மாதம் பதினைந்தாம் திகதி பிரான்ஸ் தலைநகரான பாரிஸில் ஆரம்பமாகும் மூன்றாவது தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டை தமிழக முதல் அமைச்சர் திரு. மு. கருணாநிதி ஆரம்பித்து வைப்பார்.

இம் மகாநாடு 18-ம் திகதி வரை நடைபெறும்.

தற்போது பாரிஸுக்கு விஜயம் செய்திருக்கும் தமிழக முதலமைச்சர் திரு. கருணாநிதி தமிழாராய்ச்சி மகாநாட்டை ஆரம்பித்து வைப்பார் என பாரிஸ் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இம்மகாநாடு பாரிஸில் ஆரம்பமாவதற்கு முன்னரே திரு. கருணாநிதி லண்டனுக்கு விஜயம் செய்வார். லண்டனில் தங்கியிருக்கும் அவர் தமிழாராய்ச்சி மகாநாட்டை ஆரம்பித்து வைப்பதற்காக மீண்டும் பாரிஸுக்குச் செல்வார்.

தமிழாராய்ச்சி மகா நாட்டின் தலைவரான டாக்டர் பிலியோசாவும், வண. தனிநாயகம் அடிகளாரும் விடுத்த வேண்டுகோளை அடுத்தே மகாநாட்டை ஆரம்பித்து வைக்க திரு. கருணாநிதி உடன்பட்டுள்ளார்.

இதற்கிடையில் பாரிஸுக்கு விஜயம் செய்யவிருக்கும் முதல

(4-ம் பக்கம் பார்க்க)

### மீனாட்சி



என்னுங்க, விலைக் கட்டுப்பாடு என்றதுமே பண்டங்கள் எல்லாம் கொழும்புப் புறக்கோட்டைக் கடைகளில் இருந்து மறைந்து விட்டனவாமே!

ஆமாங்க, இருக்கிற இடத்தைச் சுளுவாகக் கண்டு "வைஸ்ஸ்குவாட்டுக்குத்" தொலைபேசி மூலம் சொல்வது தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிமன்றத்தில் மனைவி கூறினாள்:

# என் தங்கையுடன் அவர் கள்ள நட்பு வைத்தார்

### நாட்குறிப்பு ஏட்டிலிருந்து அதனை நான் அறிந்தேன்

"ஒரு நாள் நான் தற்செயலாக எனது கணவரின் நாட் குறிப்பைப் பார்க்க நேரிட்ட போது, அதில் உள்ள சில குறிப்புகளின் மூலம், எனது கணவருக்கும், எனது இளைய சகோதரிக்கும் இடையே நட்புறவு இருக்கக்கூடும் என்பதை உணர்ந்தேன். எனது இளைய சகோதரி ஒவ்வொரு வாரமும் இறுதி நாளன்று எங்கள் வீட்டுக்கு வருவது வழக்கம்".

கொழும்பு தெற்கு மாஜிஸ்திரேட் திரு. ஜி- எப். எச். அத்துருப்பான முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஆட்கொணர்வு மனு வழக்கு ஒன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது சாட்சியமளித்த மனுதார் மேற்கண்டவாறு கூறினர்.

இந்த வழக்கில், டெய்ஸி யோனு பெரேரா என்ற பெண், தனது கணவரிடம் வசித்து வரும் மூன்று வயதுடைய குழந்தையை, அவரிடமிருந்து பெற்று தனது பாதுகாப்பில் ஒப்படைக்கும்படி கோரி மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். பாணந்துறையைச் சேர்ந்த குயின்டஸ் வென்ஸன்டன் பெரேரா என்பவரே இவ்வழக்கில் எதிர்மனுதாரராவார்.

மனுதார் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"எனது கணவருக்கும் எனது இளைய சகோதரிக்கும் இடையே உள்ள கள்ளத் தொடர்பு பற்றி நான் அறிந்ததும் நான் அவரிடம் அது பற்றி விசாரித்தேன். அதனை அவர் ஒத்துக் கொண்டதுடன், என்னை விவாகரத்துச் செய்துவிட்டு, அவளையே மணமுடித்துக் கொள்ளப் போவதாகவும் கூறினர்.

"இது சம்பந்தமாக நான் எனது சகோதரியையும் கடுமையாக எச்சரித்தேன். இதற்குப் பிறகு எங்கள் வீட்டுக்கு வரக்கூடாது என்று கூறி நான் அவளைத் தடுத்தேன். அதனைத் தொடர்ந்து எதிர்மனுதார் அளவுக்கு அதிகமாகக் குடிக்கத் தொடங்கினர். என்னைப் பயமுறுத்தவும் ஆரம்பித்தார். எனது இரண்டாவது குழந்தையை நான் கர்ப்பம் தரித்திருந்த பொழுது, கருச்சிதைவு செய்து கொள்ளும்படியும் என்னை அவர் வற்புறுத்தினர்.

"நான் அதனை மறுத்த பொழுது எங்கள் இருவருக்கும் இடையில் பலத்த வாக்குவாதம் தோன்றியது. அப்பொழுது என்னைப் பிடித்துக் கீழே தள்ளி விட்ட அவர், சுவர் மீது துப்பாக்கியால் சுட்டார். இந்தக் குழப்பத்தில் நான் காயமடைந்தேன். அதன் காரணமாக நான் மூன்று தினங்கள் வரை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தேன்- பின்னர் எனது குழந்தையை எடுத்துக் கொண்டு எனது பெற்றோர் வீட்டுக்குச் சென்று விட்டேன். எனது பெற்றோர் வீட்டிலும் என்னை நிம்மதியாக அவர் வாழ விடவில்லை. ஒரு நாள் பிற்பகல் நன்ருகக் குடித்து விட்டு வீட்டுக்கு வந்த அவர், தன்னுடன் ஒரு கத்தியையும் கொண்டு வந்திருந்தார். இது பற்றிப் பொலீசில் முறையிட்ட எனது பெற்ரோர் அவரைப் பொலீசாரிடம் ஒப்படைத்தனர்.

"ஒரு நாள் நான் வேலையில் இருந்து திரும்பி வந்த பொழுது, எனது குழந்தையை எதிர்மனுதார் கொண்டு சென்று விட்டதாக அறிந்தேன், உடனடியாக இது பற்றி முறைப்பாடு ஒன்று செய்வதற்காகப் பொலீஸ் நிலையத்துக்குச் சென்ற பொழுது, ஏற்கனவே முறைப்பாடு செய்து விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்த எனது பெற்ரோரை வழியில் சந்தித்தேன்- இந்த நிலையில் எனது குழந்தையின் பாதுகாப்பை எனது பொறுப்பில் ஒப்படைக்கும்படி மனு தாக்கல் செய்வதைத் தவிர வேறு வழி இல்லை பிரபு".

இந்தக் கட்டத்தில், மாஜிஸ்திரேட் மேல் விசாரணையை ஜூலை 14-ம் திகதி வரை ஒத்தி வைத்தார். (க)

### லொறி விபத்தில் இரண்டு இளைஞர்கள் மாண்டனர்

சிலாபம் ஜூலை 8

இரண்டு லொறிகள் மோதிக் கொண்டன. இதனுல் இரண்டு இளைஞர்கள் ஸ்தலத்திலேயே மாண்டனர். மூவர் அபாயமான நிலையில் சிலாபம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இம்மூவரில் இரண்டு பேர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

சிலாபத்திலிருந்து புத்தளம் நோக்கிச் சென்ற லொறி ஒன்று பத்துலு ஓயா என்ற இடத்தில் நிற்பாட்டப்பட்டிருந்த போது முல்லைத்தீவிலிருந்து வந்த லொறி ஒன்று அதன் மேல் மோதியதால் நிமால் அமரதுங்க என்ற பதினெட்டு வயது வாலிபனும், சுமார் 22வயதுடைய அமரதாசா என்ற நபரும் ஸ்தலத்திலேயே மாண்டதாக அறிவிக்கப்படுகிறது.

மற்றும் அரோலிஸ் அப்பு, டபிள்யூ. பி. லினசேன (20) மரிசையைச் சேர்ந்த பண்டார ஆகியோர் கவலைக்கிடமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது. (க-53)

### "காலஞ்சென்றவர் என்னை உணவருந்த அழைத்தார்"

"நான் கடையை விட்டு வெளியேறிய பொழுது, ஜூவானிஸ் ஒரு கட்டிலில் படுத்திருப்பதைக் கண்டேன். அப்பொழுது தன்னுடன் சேர்ந்து சிறிது உணவு அருந்த வருமாறு அவர் என்னை அழைத்தார்- நான் மறுத்து விட்டு வெளியேறினேன். காலையில் ஜூவானிஸ் கொல்லப்பட்டதாக நான் கேள்விப்பட்டேன்".

வலஸ்முல்ல மாஜிஸ்திரேட் திரு. ஜி- வி. டபிள்ட- டி- சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கொலை வழக்கொன்றில் சாட்சியமளித்த வை- ஏ. சாள்ஸ் என்பவர் மேற்கண்டவாறு கூறினர்.

இந்த வழக்கில், போவல என்ற இடத்தைச் சேர்ந்த பி. ஜூவானிஸ் என்ற 45 வயது நபரை தடியினுல் தாக்கிக் கொலை செய்ததாக, டபிள்யூ. பியதாச என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சாட்சி தொடர்ந்து கூறியதாவது:—

"ஜனவரி மாதம் 23ம் திகதி பிற்பகல் சுமார் 6-30 மணியளவில், எனது மைத்துனருக்கு உணவு வாங்குவதற்காக நான் கடைக்குச் சென்றேன். அப்பொழுது ஜூவானிஸ் கடையில் இருந்தார். அதே சமயத்தில் சந்தேக நபர் ஒரு கட்டு பீடி வாங்குவதற்காகக் கடைக்கு வந்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் தனது கையில் ஒரு டார்ச் லைட்டும், கமக்கட்டுக்குள் ஒரு தடியும் வைத்திருந்தார். பீடிக் கட்டைப் பெற்றுக் கொண்ட சந்தேக நபர், அதில் ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு அங்கிருந்து அகன்ருர்.

"சந்தேக நபர் பீடி பற்ற வைக்க நெருப்பு கேட்ட பொழுது பீடி பற்ற வைப்பதற்காக அங்கே வைக்கப்பட்டிருந்த லாம்பு அவருக்குக் கொடுக்கப்பட்டது. பீடிக்காக அவர் காசு கொடுத்தாரா, அல்லது இல்லையா என்பது பற்றி எனக்குத் தெரியாது". (க)

### தொழிற்சாலை விபத்துக்களை தடுக்க வழி

பெர்லின் ஜூலை 8

"தொழிற்சாலை விபத்துகளிலிருந்து பாதுகாப்பு" அளிப்பது பற்றி விவாதிப்பதற்காக சோஷலிஸ்ட் நாடுகளின் தொழிற்சங்கங்கள் பெர்லினில் ஒரு மகாநாடு நடத்தின.

1970 – 1975 ஐந்தாண்டு திட்டமொன்றை மகாநாடு வகுத்தது. இயந்திரங்களை மென்மேலும் அதிகமாகப் பயன்படுத்துவதாலும், தானியங்கி இயந்திரங்களை உபயோகிப்பதாலும் ஏற்படும் விபத்துகளிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் பிரச்சினைகள் பற்றி தொழிற்சங்கங்கள் விரிவான முறையில் நடவடிக்கை எடுப்பதற்கு இந்தத் திட்டம் வழிகாட்டுகிறது. மகாநாடு மூன்று தினங்களாக நடைபெற்றது. (க)


## தந்தி
### சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

கட்டிட பொருட்கள்

இறக்குமதி செய்யப்பட்ட முதல் தரமான போட்லான்ட் சிமெந்து 11-75 வீதம் பெற்றுக் கொள்ளலாம். பிரின்ஸ்லீ டிரேடிங் கம்பனி, 414/21, கே. சிறில் சி. பெரேரா மாவத்த, கொழும்பு–13.

R. 66829

### மருந்து

மதன சஞ்சீவி லேகியம். (ஆண்களுக்கு மட்டும்) பாலிய சேஷ்டையினுலோ, அல்லது அதிக சம்போகத்தினுலோ, வீரியம் ஆண்மை குறைந்தவர்களுக்கும் SEXUAL DEBILITY) சக்தியை இழந்தவர்களுக்கும் இழந்துபோன சக்தியை மீட்டு, புதிய சக்தியையும் திரேக வளர்ச்சிக்கும், குடும்ப வாழ்க்கைக்கும் சிறந்த லேகியம். ஒரே புட்டியில் குணம் காணலாம். மதன சஞ்சீவி ஒரு ருத்தல் ரூ. 23/-. ½ ருத்தல் ரூ. 12/-. வி. பி. பி. ஆடர் கவனிக்கப்படும். முருகானந்தா வைத்தியசாலை, 104, செட்டியார் தெரு, கொழும்பு—11.

R. 67937


### எச்சரிக்கை வேண்டும் தானே!

கடந்த மே மாதம் இருபத்தேழாம் திகதி தொடக்கம் நீலம், சிவப்பு நிறங்களுக்கு நல்ல மௌசும் கிராக்கியும் ஏற்பட்டுள்ளன- சேலையோ, ஷேட்டோ, கைக்குட்டையோ, சாரமோ, கால்சட்டைத் துணியோ, ரையோ, எல்லாவற்றையும் நீலத்தில் அல்லது சிவப்பு நிறத்தில் தானும் கேட்கின்றுர்கள் மக்கள்- ஒரு கடைக்காரர் சொன்னுர் தாங்கள் நீலம், சிவப்பு நிறம் தேடித் திணறிப் போனேம் என்று- இதே நேரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கத்துவம் கோரி ஆயிரம் ஆயிரமாக மனுக்களும் வந்து குவிகின்றனவாம்- இப்புதுப் போக்கில் சிறிது சந்தேகங்கொண்ட கட்சித் தலைமைப் பீடத்தினர் மனுக்களில் வெள்ளாடுகளையும், செம்மறிகளையும் தெரிந்த பின்னரே புதியவர்களைச் சேர்த்துக் கொள்ள முடியும் என்று குறிப்பிட்டுள்ளனராம்- அது மிகவும் நல்லது தான்- ஏனென்றுல் கூடிக் கெடுப்பதற்காகவும் சிலர் அங்கத்தவர் ஆகலாம் அல்லவா? அவர்களையிட்டு எச்சரிக்கையாய்த்தானே இருத்தல் வேண்டும்-

தந்தி

### கூட்டுறவு சமாஜப் பணத்தை மோசடி செய்தாராம்

கரகம்பிட்டியா பலநோக்குக் கூட்டுறவுச் சமாஜத்துக்குரிய ரூபா 26,243-19 மோசடி செய்ததாக, ஆடிட்டர் ஜெனரல் காரியாலயத்தைச் சேர்ந்த திரு. டி. ஈ. சமரவீரா என்பவர் குற்றஞ் சாட்டப்பட்டு உள்ளார். இம்மோசடி 1966-ம் ஆண்டு டிசம்பர் 27க்கும் 1967 செப்டம்பர் 30க்கும் இடையில் நடந்துள்ளது.

நுகேகொடைப் பொலீஸார் இவ்வழக்கை கொழும்பு தெற்கு நீதவான் திரு. கொலின் மெண்டிஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்தனர்.

தெகிவளை, ஜயசிங்க அவனியூவைச் சேர்ந்த சி. எம். சார்லொட் சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:—

"இக்கூட்டுறவு சமாஜத்தில் ஒன்பது வருடங்களாக லிகிதராகவும் பணம் வாங்குபவராகவும் கடமையாற்றுகிறேன். எதிரிதான் இச்சமாஜத்தின் தலைவர். ஒவ்வொரு நாளும் கணக்குப் பதிந்து மனேஜரிடம் கொடுப்பேன். அவர் ரசீதுகளுடன் பொக்கிஷதாரிடம் கொடுப்பார். மனேஜர் இவைகளைக் கொடுக்கிருரா என்று பார்ப்பது எனது வேலையல்ல.

"பொக்கிஷதாரர் இல்லாத போது, ஒன்பது மாதங்கள் எதிரி தற்காலிக பொக்கிஷதாரராகக் கடமையாற்றினுர்" என்று கூறினுர்.

மேல் விசாரணை ஜூலை மாதம் 26ந் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டது. (க-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தை அடிக்கடி கண்டித்ததால்

# வாழ்க்கை வெறுத்தது இளம்பெண் தற்கொலை

"காலஞ்சென்ற மாலினி, முதற் தாரத்தின் மூலம் எனக்குப் பிறந்த மகளாவார். நான் முதல் மனைவி இறந்ததும் நான்கு குழந்தைகளின் தாயான ஒரு விதவையை மறுமணம் செய்தேன். எனது இரண்டாவது மனைவி கர்ப்பமுற்றிருக்கும் பொழுது, வீட்டு வேலைகளைக் கவனிக்கும் பொறுப்பு மாலினியைச் சார்ந்திருந்தது. மாலினி வேலைகளை ஒழுங்காகவும், சுத்தமாகவும் செய்வதில்லை என்று எனது மனைவி குற்றம் சொன்னதை அடுத்து, நான் அவளைக் கண்டித்தேன். அதன் பின்னர் அவள் வீட்டில் உள்ளவர்களைப் புறக்கணிக்கத் தொடங்கினாள்".

எஸ். மாலினி என்ற பதினேழு வயதுப் பருவப் பெண்ணின் மரணம் சம்பந்தமான விசாரணை, கொழும்பு நகர மரண விசாரணை அதிகாரி திரு. எகர்ட்டன் பி. வீரக்கோன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது, காலஞ் சென்ற பெண்ணின் தந்தையும், கொழும்பு அப்துல் ஹமீத் மாவத்தையைச் சேர்ந்தவருமான ராமையா சிவசாமி என்ற 40 வயதுடைய நபர் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

காலஞ்சென்ற மாலினி என்ற பெண் மண்ணெண்ணெயைக் குடித்து விட்டுப் பின் தனக்குத் தானே நெருப்பு மூட்டித் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படுகிறது. சாட்சி தொடர்ந்து சொன்னதாவது:—

"சம்பவம் நிகழ்ந்த தினத்தன்று பிற்பகல் 3–30 மணியளவில் நான் விஷயத்தைக் கேள்விப்பட்டு, காலஞ்சென்றவரைப் பார்ப்பதற்காக நேரே ஆஸ்பத்திரிக்குப் போனேன். "ஏன் இந்தப் பரிதாபமான முடிவைத் தேடிக் கொண்டாய்?" என்று நான் அவளைக் கேட்ட பொழுது, "எனக்கு மண்ணெண்ணெயைக் குடிக்க வேண்டும் போலிருந்தது. நான் குடித்தேன். இப்பொழுது எனது வழியைத் தேடி நான் போகிறேன்" என்று அவள் கூறினாள்"

எஸ். லதீபா பீபி என்ற ஐம்பது வயதுப் பெண் சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:—

"பக்கத்து வீட்டில் வசித்து வந்த காலஞ்சென்ற பெண்ணை எனக்கு நன்றாகத் தெரியும். எல்லா வீட்டு வேலைகளையும் அவளே செய்து வந்தாள். காலஞ்சென்ற பெண்ணின் தாயார் இறந்த பிறகு, அவளது தந்தை நான்கு குழந்தைகளுக்குத் தாயான ஒரு விதவையை மறுமணம் செய்து கொண்டார். காலஞ் சென்றவரின் மாற்றாந் தாய், அவளைப் பற்றி அவளது தந்தையிடம் கூறி வந்ததையடுத்து, அவர் மகளை அடிக்கடி கண்டிக்கத் தொடங்கினார். இதன் காரணமாக, காலஞ்சென்ற பெண் மிகவும் மனவருத்தத்துடன் காணப்பட்டார். சம்பவம் நடைபெற்ற தினம் பிற்பகல் சுமார் 2–30 மணியளவில் காலஞ்சென்ற பெண் குளியலறைக்குள் செல்வதைக் கண்டேன். சில நிமிடங்களில் கூக்குரல் சப்தம் கேட்டு நான் அங்கு ஓடிய பொழுது, உடையில் நெருப்புப் பற்றி எரிந்து கொண்டிருந்தது. நான் உடனடியாக நெருப்பை அணைத்து அவளை, மற்றும் சிலரின் உதவியுடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றேன்".

மரண விசாரணையின் முடிவில், தற்கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

## "நள்ளிரவில் யாரோ ஒருவர் முனகும் சப்தம் கேட்டது"

"நடு இரவில் யாரோ ஒருவரின் முனகல் சத்தம் கேட்டது. அப்பொழுது காயப்பட்டவரின் தம்பி ஓடி வந்து, தனது அண்ணன் மேல் அசிட் வீசப்பட்டதாகக் கூறினான்".

மாபகம தெற்கு மொரலிகொட ஹேவகே எட்வினின் சாட்சியம் இதுவாகும். கொலை முயற்சி வழக்கொன்றில் அவர், இப்படி சாட்சியம் அளித்தார்.

மத்துகம மாஜிஸ்திரேட் திரு. நிசங்கா வீரரட்ன முன்னிலையில் விசாரிக்கப்பட்ட இவ்வழக்கில் எச். ஏ. வை. எச். சுகததாஸ, கே. குணதாஸ ஆகியோர், நாயலோவா என்னுமிடத்தைச் சேர்ந்த எச். தேமிஸ் மீது அஸிட் வீசி அல்லது பலாத்காரமாக அஸிட் குடிக்கச் செய்து கொலை செய்ய முயற்சித்ததாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எட்வின் மேலும் சாட்சியம் அளிக்கையில், "எனது வீடு காயம்பட்டவரின் வீட்டருகில் உள்ளது. சம்பவம் நடந்த அன்று நான் விறுந்தையில் படுத்திருந்தேன். பியதாஸா ஓடி வந்து தனது அண்ணன் மேல் அஸிட் வீசப்பட்டதாகவும் என்னை அங்கு வரும்படியும் கூப்பிட்டார்.

அங்கு போன போது, அல்பேட் தன் மீது அஸிட் வீசியதாக தேமிஸ் என்னிடம் கூறினார். கார் பிடித்து அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போன பின், பொலீஸில் முறையிட்டேன்" என்று கூறினார்.

மேல் விசாரணை ஜூலை 15-க்கு ஒத்தி வைக்கப்பட்டது. (க-15)

## கார் முகப்புக் கண்ணாடியை களவெடுத்தாராம்

கார் முகப்புக் கண்ணாடியைத் திருடியதாக ஆர். கிங்ஸ்லி என்பவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு, கொழும்பு தெற்கு நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். திருடப்பட்ட கண்ணாடி திரு. பிரேமசிரி மலேவன என்பவரின் காரில் இருந்ததாகும்.

பொலீஸாரின் விசாரணையின் படி, வேறொருவருக்கு காரின் முகப்புக் கண்ணாடி தேவைப்பட்டது. எதிரிக்குக் குடிக்கக் கொடுத்து படமும் காட்டி, கராஜிலிருந்த காரில் இருந்து கண்ணாடியைத் திருடச் சொல்லியுள்ளார்கள்.

எதிரி கராஜுக்குள் போய், அதைக் கழட்டி வெளியில் நின்றவர்களிடம் கொடுத்துவிட்டு வந்தார். அடுத்த வீட்டுக்காரர் திரு. சொய்சா இதைக் கண்டு சத்தம் போட்டார். பின் அயலவரும், சொய்ஸாவும் சேர்ந்து எதிரியைப் பிடித்துப் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதவான் எதிரிக்கு இரண்டு மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார். (க-15)

## 'எனது அண்ணனின் முதுகில் கத்தியால் குத்தினர்'

"முதலாவது சந்தேக நபர் ஒரு கத்தியினால் சேனரத்தினவின் முதுகில் குத்தினார். அப்பொழுது சேனரத்தின வீதியில் நின்று கொண்டிருந்தார். பிறகு மற்றொரு சந்தேக நபர் அவரை முதலாம் எதிரியின் வீட்டுக்குள் இழுத்தெடுத்து, கிடுகு ஒன்றினால் அவரைத் தாக்கினார்.

மத்துகம மாஜிஸ்திரேட் திரு. நிசங்கா வீரரத்தின முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கொலை வழக்கு ஒன்றில் சாட்சியம் அளித்த விஜயசேன மேற்கண்டவாறு கூறினார்.

இந்த வழக்கில், புலின் சேனரத்தின என்பவரைக் கொலை செய்ததாக, பி. டி. ஜே. ஆரியவன்ச, பி. டி. சுனில் பி. டி. சி. தயாரத்தின, எஸ். கே. லியனகே, "கொட்டப்பிட்டி ஆச்சி" என்று அழைக்கப்படும் எம். டொசி நோனா ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சாட்சி தொடர்ந்து கூறியதாவது:—

"காலஞ் சென்றவர் எனது மூத்த சகோதரனவார். சம்பவம் நடைபெற்ற தினத்தன்று நான் வீட்டில் இருந்த பொழுது, பொரல்கம்பொல சந்திப் பக்கத்திலிருந்து, ஓடி வந்த எனது இளைய சகோதரன், ஜினசேன, சிறில், சுனில், லியனகே ஆகியோர் சகோதரனைத் தாக்குவதாகக் கூறினான். உடனே நான் பொரல்கம்பொல சந்திக்கு ஓடினேன். அங்கே ஒரு கூட்டம் காணப்பட்டது.

இரண்டாம், நான்காம் எதிரிகள் எனது மூத்த சகோதரனைப் பிடித்துக் கொண்டிருப்பதையும் மூன்றாம் எதிரி அவரைத் தாக்கிக் கொண்டிருப்பதையும் கண்டேன். அதே சமயத்தில், முதலாம் எதிரி ஒரு கத்தியை உருவி எனது சகோதரனின் முதுகில் குத்தினார்."

விசாரணை இம்மாதம் 14-ம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது. (க)

## விமானப் பணிப் பெண்கள் மறைத்து வைக்கப்பட்டனர்

லண்டன், ஜூலை 9

பெண் வாடையை வெறுத்த 80 வயது யோகி ஒருவர் ஏயர் இந்தியா விமானத்தில் பம்பாய் பயணமானார். இதனால் விமானப் பணிப் பெண்கள் வேறோர் பகுதியில் மறைக்கப்பட்டனர்.

விமானத்தில் முதல் வகுப்பு முழுவதையும் 4,000 ஸ்டேர்லிங் கொடுத்து ரிசர்வ் செய்தார். எந்தப் பெண்ணும் அந்தப் பகுதிக்கு வரக் கூடாது என்ற உத்தரவும் வழங்கப்பட்டது.

இந்து சமயப் பெரியாரான ஸ்ரீ சுவாமி யோகி மகராஜ் தேவனுக்கு பிரிட்டனில் 25,000 சிஷ்யர்கள் உள்ளனர்.

விமானத் தளத்துக்கு காரில் போகும் பொழுது சுவாமி கண்ணை மூடிக் கொண்டே சென்றார். சுவாமியாருடன் பத்து பணியாளர்களும் சென்றார்கள்.

அடுத்த பகுதியில் பிரயாணம் செய்த சில பெண்களுடன், விமானப் பணிப் பெண்களும் மறைத்து வைக்கப்பட்டனர்.

காவி உடை அணிந்த இவர்கள் பிரயாணம் முழுவதும் எதுவும் சாப்பிடாது விரதம் இருந்தனர். இடைவழியில் விமானம் நின்ற இடங்களில் இறங்கவும் இல்லை.

லண்டனில் ஒரு இந்து கோவிலைத் திறந்து வைக்கவே சுவாமிஜி லண்டன் வந்து சேர்ந்தார்.

"இந்த ஒரு பெண்ணாவது அருகில் வந்தால், மனதில் கிளர்ச்சி ஏற்பட்டு, தனது மதக் கட்டுப்பாட்டுக்கு ஊறு விளையலாம் என்பதற்காகவே சுவாமிஜி பெண்களை வெறுக்கின்றார் என அவரின் சிஷ்யர் ஒருவர் கூறினார். (க-15)

## சந்தேக நபர்கள் இருவரை பொலீசார் பிடித்தனர்

மண்டைதிவு, ஜூலை 8

அண்மையில் மண்டைதீவில் நடைபெற்ற திருட்டு சம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலீசைச் சேர்ந்த பொலீஸ் சார்ஜன்ட் தாமோதரம்பிள்ளை, தம்பிராசா, குமாரரத்தினம் குமாரகுலசிங்கம் என்னும் இருவரையும் சந்தேகத்தின்பேரில் கைது செய்து பொலீஸ் காவலில் வைத்துள்ளார்.

சென்ற மாதம் 30ந் திகதி இரவு மண்டைதீவில் உள்ள வயது சென்ற பெண் ஒருத்தியின் கை, கால்களையும் கண்ணையும் கட்டிவிட்டு 5000 ரூபா பணத்தையும், சேலைகளையும் முகமூடி அணிந்து திருடிச் சென்ற திருடர்களை சார்ஜன்ட் தாமோதரம்பிள்ளை தலைமையிலான பொலீசார் இதுவரை தேடி வந்தனர்.

தற்பொழுது மண்டைதீவில் இருந்து கிடைத்த ரகசியத் தகவல்களைத் தொடர்ந்தே மேற்படி இருவரும் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். ரகசியத் தகவல் பட்டியலில் இன்னும் பலரது பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனவாம். அவர்களையும் பொலீசார் தேடுகின்றனர். (க-213)

## வருகிறார்

லண்டன், ஜூலை 8

சேர். வின்ஸ்டன் சேர்ச்சில் ஞாபகார்த்த உபகார நிதி பெற்ற பிரிட்டிஷ் வங்கி அதிகாரி ஒருவர் அடுத்த மாதம் இலங்கை வருகிறார்.

பிரிட்டிஷ் வெளிநாட்டு வர்த்தக அபிவிருத்தி சபையில் உதவி மனேஜராக கடமையாற்றும் திரு. ஸ்ருவர்ட் ஆனல்ட் இலங்கையில் தங்கியிருக்கும் போது இங்குள்ள வங்கி வசதிகள் பற்றி ஆராய்வார்.

## இராணுவ வீரர் 10 பேர் பலி!

பேர்ச்ரெஸ்காடென், ஜூலை. 8

மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த ராணுவ ஹெலிக்கோப்டர் ஒன்று விபத்துக்குள்ளாகியதால் பத்து ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் ஆறு பேர் பிரெஞ்சுக்காரர், நால்வர் ஜெர்மன்காரர்கள்.

விபத்தில் உயிர்தப்பிய பிரெஞ்சுக்காரர் ஒருவர் மூனிச் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## "பெங்குவின்" மூனிதர் மறைவு

லண்டன், ஜூலை 8

உலகின் பிரசித்திபெற்ற "பென்குவின்" புத்தக வெளியீட்டு நிறுவனத்தின் ஆரம்பகர்த்தாவான சர். அலன்லேன், தமது அறுபத்தேழாவது வயதில், புற்று நோயால் நேற்று லண்டனில் மரணமானார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவிட்டபுரத்தில் நெருக்கடி நிலை

# தாழ்த்தப்பட்டோர் திரளாகப் பிரவேசம்

மாவிட்டபுரத்தில் நெருக்கடி நிலை நிலவுகிறது. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சுமார் நூறு பேர் நேற்றுக் காலையில் மாவிட்டபுரம் ஆலயத்துக்குள் சென்று, இரண்டாவது வீதியில் இருந்து இறை வழிபாடு செய்தனர்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைவர் திரு. எஸ். டி. என். நாகரத்தினம் தலைமையிலேயே தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் ஆலயப் பிரவேசம் செய்தனர்.

ஆலயத்தின் உள்ளும் புறமும் பெருந்தொகையான பொலீசார் காவல் புரிந்து கொண்டிருக்க, இவர்கள் ஆலயப் பிரவேசத்தை மேற்கொண்டனர். அவர்கள் வழிபாடு செய்து விட்டு வெளியேறியதும், இரண்டாவது வீதியிலுள்ள சுவரில் மூன்று இடங்களில் கம்யூனிஸ்ட் கட்சியின் சின்னமான அரிவாளும் சுத்தியலும் வரையப்பட்டிருக்கக் காணப்பட்டது.

அதே நேரத்தில், பொது இடங்களிலும், வீடுகளிலும் வெள்ளை கறுப்பு நிறக் கொடிகள் பறக்க விடப்பட்டு இருந்தன. நேற்று முழுவதும் இப் பகுதியில் உள்ள கடைகள், ஹோட்டல்கள் முதலானவை மூடப்பட்டிருந்தன. பொலீசார் மேற்கொண்ட நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே இப் பகுதியில் வசிப்போர் கொடிகளைப் பறக்க விட்டு, கடைகளை அடைத்து "ஹர்த்தால்" அனுஷ்டித்தனர் எனக் கூறப்படுகிறது.

பொலீசார் துங்கள் காலணிகளைக் கழற்றாமல் ஆலயத்தினுள் பிரவேசித்தனர் என்றும் சொல்லப்படுகிறது.

நேற்று இங்கு ஆரம்பமாக இருந்த திருவிழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. இதற்கிடையில், இப் பகுதியை பொலீசார் இரவும் பகலும் கண்காணித்து காவல் புரிந்து வருகின்றனர். (க)

## வெலிமடைதேர்தல் ஆட்சேப வழக்கு தள்ளுபடியானது

வெலிமடை தேர்தல் ஆட்சேபனை வழக்கு நேற்றுத் தள்ளுபடி செய்யப்பட்டது.

முன்னாள் வெலிமடை எம். பி. திரு. பேர்சி சமரவீராவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை நிராகரித்து நீதியரசர் திரு. ஏ. சி. ஏ. அலஸ் தீர்ப்பு வழங்கினார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. ஆர். எம். பண்டார வெலிமடை எம். பி.யாகத் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது தெரிந்ததே.

நீதியரசர் தனது தீர்ப்பில், வழக்குக்கான முழுச் செலவுத் தொகையான 1575 ரூபாவில் அரைவாசி திரு. ஆர். எம். பண்டாரவுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும், மிகுதி இரண்டாம், மூன்றாம் எதிர் மனுதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட சமயம் பொறுப்பாக இருந்த பதில் அரசாங்க அதிபர் திரு. ஆனந்த மாதென உதவி அரசாங்க அதிபர் திரு. சி. திஸநாயக்கா ஆகியோர் இந்த வழக்கின் இரண்டாம், மூன்றாம் எதிர் மனுதாரர்கள் ஆவர்.

வெலிமடை தேர்தல் ஆட்சேபனை வழக்கு ஜூன் 22ம் திகதி நுவரெலியாவில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பொதுத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட தினமான 1970 ஏப்ரல் 23ம் திகதி திரு. பேர்சி சமரவீராவின் நியமனப் பத்திரம் சம்பந்தமாக எழுப்பப்பட்ட ஆட்சேபனை ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவரின் மனு நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (க)

## கள்ளச் சந்தை

### வியாபாரிகளே உஷார்!

கள்ளச் சந்தை வியாபாரிகளே உஷார். உணவு கமிஷனரால் நியமிக்கப்பட்டுள்ள திடீர் சோதனைக் குழுக்கள் ஆயத்தமாகி விட்டன!

பயிற்சி பெற்ற, நேர்மைக்குப் பெயர் பெற்றவர்களே இந்த திடீர்ச் சோதனைக் குழுவிற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

உணவுப் பொருட்களில் கொள்ளை லாபம் அடிப்பதைத் தடுப்பதற்காகவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த திடீர் சோதனைக் குழுக்கள் எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் உணவுப் பொருட்கள் விற்கும் இடங்களில் சோதனையிடும். பொலீசாரும் இவர்களுக்குத் துணைபுரிவர்.

பால் மா முதலியவற்றுக்கு ஏற்கனவே கட்டுப்பாடு விலைகள் விதிக்கப்பட்டுள்ளன. ஏனைய கைத்தொழில் பொருட்களுக்கும் விரைவில் கட்டுப்பாடு விலை விதிக்கப்படும்.

கடுமையான தண்டனை வழங்குவதற்காக உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம் திருத்தப்படும். குற்றவாளிகளுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படும். பதிவுப் பிரஜைகளின் பதிவு ரத்துச் செய்யப்படும்.

அரசாங்கம் பொருட்களுக்கு விலைக் கட்டுப்பாடு விதிப்பதையிட்டு புறக்கோட்டை வட்டாரத்தில் அதிருப்தி நிலவுகிறது. இது வரை தாராளமாகக் கிடைத்த அ?ேக பொருட்கள் பதுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளது. (க-15)

## ஆங்கில ஆசிரியர் சங்க மகாநாடு

"சகல பாடசாலைகளிலும் மூன்றாம் வகுப்புக்கு மேல் ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்பட வேண்டும். 1973-ம் வருடம் ஜீ. சீ. ஈ. பரீட்சைக்கு ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்பட வேண்டும்!"

அகில இலங்கை ஆங்கில ஆசிரியர்கள் சங்கத் தூது கோஷ்டிகளின் வருடாந்த மகாநாடு நாளை கம்பஹா ரத்னவலி பாலிகா மகா வித்தியாலயத்தில் நடைபெறும். அப்போது மேற்கூறிய யோசனை பற்றி விவாதிக்கப்படும்.

இந்த மகா நாட்டில் இன்னும் பல முக்கிய யோசனைகள் பற்றியும் விவாதிக்கப்படும். (ல)

## தமிழக முதல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மைசூர் இந்தியன் மாளிகையில் இந்திய தூதுவராலய அதிகாரிகளாலும் இந்திய மாணவர்களாலும் வரவேற்கப்பட்டார்.

அங்கு அவர் பேசுகையில். "வெளி நாட்டில் கல்வி பயிலும் பாரத இளைஞர்கள் தாயகத்தின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட கல்வியை முடித்துக் கொண்டதும் தாயகம் திரும்ப வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.


## வாழ்க்கையில் பிரச்சினையா?

## கவலை வேண்டாம்...

உங்கள் பிரச்சினை எதுவானாலும் சரி, உங்கள் வாழ்க்கை மறுமலர்ச்சியடைந்து, வியாபாரத்தில் லாபம் பெற்று, தொழிலில் உயர்வடைந்து, வாழ்க்கையில் வெற்றியடைந்து குடும்பத்தின் தொல்லை நீங்கி வாழ்நாள் எல்லாம் இன்புற்று வாழ தினமும் காலையிலும், மாலையிலும் உங்கள் வீட்டிலோ, கடையிலோ

### ஸ்ரீ ராம வாசனைப் புகையை

தவறாது பாவித்து பலன் அடையுங்கள்.

ஒரு மாத பாவனைக்கு ரூ. 3-25

மூன்று மாத பாவனைக்கு ரூ. 7-50

வி. பி. பி. ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பரீட்சை, பந்தயம், வழக்கு மற்றும் செல்லும் இடமெல்லாம் வெற்றியை தரவல்லது.

### ஸ்ரீ சரஸ்வதி இராச யந்திரம்

(விலை ரூ. 15/50 மட்டுமே)

வேறு எந்த காரணமாயிருந்தாலும் முழு விபரங்களையும் எமக்கு எழுதி தவறாத நிவர்த்தியைப் பெறுங்கள். வசியம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் விசேஷமாக கவனிக்கப்படும். காதலில் வெற்றி, பெற்றோரின் விருப்பம், நிச்சயமாக பெற்றுக் கொடுக்கப்படும். இருவர் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்.

அரசாங்க அனுமதிபெற்ற

மகா மாந்திரீகர்

நீலன் கந்தசாமி,

லக்ஸல கட்டிடம், நிட்டம்புவ.


## சீனாவிலிருந்து அதிக அரிசி இலங்கைக்கு வருகிறது

சீன — இலங்கை பண்டமாற்று வர்த்தகத்தின் கீழ் சீனக் குடியரசு இரண்டு லட்சம் தொன் அரிசியை இலங்கைக்கு வழங்க ஒப்பந்தம் செய்துள்ளது.

இந்த ஒப்பந்தத்திற்கு மேலாக மேலும் ஐம்பதினாயிரம் தொன் அரிசியை இலங்கைக்கு வழங்க தற்போது சீனக் குடியரசு முன் வந்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரிலேயே மேற்படி ஐம்பதினாயிரம் தொன் அரிசியை வழங்க சீனக் குடியரசு முன்வந்துள்ளதாக அறியப்படுகிறது.

மேற்படி அரிசியைப் பெறுவது சம்பந்தமாக தற்போது இரு நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாகி உள்ளன.

இலங்கையின் சார்பில் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி டாக்டர் ஜயனத் பி. கெலேகம தலைமையிலான தூதுக் கோஷ்டி இங்குள்ள சீன தூதரகத்தின் வெளிநாட்டு விவகார பொறுப்பு அதிகாரி திரு. கிஸி யீ சிப் தலைமையிலான தூதுக் கோஷ்டியுடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய வெளிநாட்டு செலாவணி பிரச்சினை பற்றி இலங்கைத் தூதுக் கோஷ்டி பேச்சு வார்த்தையின் போது சீன தூதுக் கோஷ்டிக்கு விளக்கமாக எடுத்துக் கூறி உள்ளதாக அறியப்படுகிறது.

எனினும் இந்த ஐம்பதினாயிரம் தொன் அரிசியையும் சீன — இலங்கை பண்டமாற்று வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் தரலாம் என இலங்கைத் தூதுக் கோஷ்டி சீன தூதுக் கோஷ்டியிடம் கேட்டுள்ளது.

இதனிடையில், ஜப்பான் பர்மா ஆகிய நாடுகளில் இருந்தும் அரிசி இறக்குமதி செய்யும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

ஜப்பான் ஏற்கனவே இலங்கைக்கு அரிசியை வழங்க சம்மதம் தெரிவித்துள்ளது. இது சம்பந்தமாக இலங்கை அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த ஜப்பான் தூதுக் கோஷ்டி ஒன்று விரைவில் இலங்கை வர உள்ளது. (க)

## இந்திய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அச்சிட்டு விற்பதற்காக "உண்மையான பாவிப்பாளர் லைசென்ஸின்" கீழ் இந்த சாரிகளைக் குறிப்பிட்ட கைத்தொழில் அதிபர் இறக்குமதி செய்தாராம்.

அதன் பின் இப்புடவைகளை அச்சிடாமலேயே விற்பனைக்கு விட்டிருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

யார் 97 சதத்துக்கும், ரூபா 1-07, சதத்துக்கும் இப்புடவை இந்தியாவில் இருந்து வாங்கப்பட்டிருப்பதாகவும் இப்போது 5½ யார் புடவையை ரூ. 19-25-க்கு விற்று கொள்ளை லாபம் சம்பாதிப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

1969-ம் ஆண்டு இந்த கைத்தொழில் அதிபர் 412,500 யார் புடவையும், 1970-ம் ஆண்டு 453,750 யார் புடவையும் இறக்குமதி செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இவ்விஷயம் கைத்தொழில்மந்திரியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. (ல)

இப் பத்திரிகையை அச்சிட்டவர்: சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு — 12 (இலங்கை), வெளியிட்ட திகதி 9 ஜூலை 1970

Thanthi, 5, Gunasena Mawatha, Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org